பேரூராட்சிகளின் இயக்குநர் சென்னை-28, அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை:- திரு.கிரண் குராலா, இ.ஆ.ப.,

ந.க.எண். 5178/2023/அ6 நாள்: 03.05.2023

10 MAY 2023 ஈரோடு மண்டலம்

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – ஈரோடு மண்டலம் – ஈரோடு மாவட்டம் – லக்கம்பட்டி பேரூராட்சி வரித்தண்டலர் முருகன் (திரு).கே.கே – 05.01.2019 அன்று பணியிடைக் காலமானார் – அன்னாரது வாரிசுதாரர் மற்றும் மகள் பரமேஸ்வரி (திருமதி).கே.எம் – என்பவருக்கு காசிபாளையம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்யப்பட்டது – 04.07.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது

பார்வை :
1. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.14265/2019/பு2, நாள்.27.06.2019
2. அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)துறை, நாள். 26.02.2021
3. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்துரு ந.க.எண்.14265/2019/பு2 , நாள். 13.03.2023

******

ஆணை:-

ஈரோடு மண்டலம் ஈரோடு மாவட்டம் லக்கம்பட்டி பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து 05.01.2019-ல் பணியிடைக் காலமான திரு.கே.கே.முருகன் என்பவரின் வாரிசுதாரரும் மகளுமாகிய திருமதி.கே.எம்.பரமேஸ்வரி என்பவருக்கு பார்வை 1-ல் காணும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் ஈரோடு மாவட்டம் காசிபாளையம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியர் 04.07.2019 முற்பகல் முதல் வரித்தண்டலர் பணியில் இணைந்துள்ளார். தற்போது கூகலூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

அதனை தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற திருமதி.கே.எம்.பரமேஸ்வரி என்பவரது பணியினை வரன்முறை செய்யக் கேட்டு பார்வை 3-ல் காணும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பரிந்துரை செய்து கருத்துரு வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் இந்நேர்வில் பரிசீலிக்கப்பட்டதில் பார்வை 2-ல் காணும் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021-ல் வெளியிடப்பட்ட வழிமுறைகளின்படி

நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் இயக்குநர் நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் ஈரோடு மாவட்டம், கூகலூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.கே.எம்.பரமேஸ்வரி என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி/ தற்போது பணிபுரியும் அலுவலகம் | கருணை அடிப்படையில் முதன் முதலில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியிடம்/ பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | திருமதி.கே.எம்.பரமேஸ்வரி<br>இளநிலை உதவியாளர்<br>கூகலூர் பேரூராட்சி | வரித்தண்டலர்<br>காசிபாளையம்<br>பேரூராட்சி | 04.07.2019<br>மு.ப | 04.07.2019<br>மு.ப |

மேலும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பணிப்பதிவேட்டின் நகலினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பிடவும் ஈரோடு மண்டல பேரூராட்களின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இயக்குநர்

பெறுநர்

திருமதி.கே.எம்.பரமேஸ்வரி
இளநிலை உதவியாளர்
கூகலூர் பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்.
(ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:-

1. மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம்
3. செயல் அலுவலர், கூகலூர் பேரூராட்சி
4. அ6 இருப்பு கோப்பு
5 அ2 இருக்கை(தொடர் நடவடிக்கைக்கு)

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
ஈரோடு மண்டலம், ஈரோடு -638 011.

ந.க.(3).பே.உ.எண்: 14265/2019/அ2, நாள்: 10.05.2023
அனுப்பப்பட்டது.

பெறுநர்
திருமதி. கே.எம். பரமேஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
கூகலூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

10/05/23

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம், ஈரோடு -638 011.

10/5/23 10.5.23